Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JUNE 12 2024

புதன்கிழமை ஜூன் 12, 2024 | ஒளி: 09 கதிர் 271 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# கணினி கல்வியறிவு 39% ஆக அதிகரிப்பு

இலங்கையில் கணினி கல்வியறிவு 2023ஆம் ஆண்டில் 39% ஆக அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணினி மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு குறித்த அதன் சமீபத்திய வெளியீட்டில், நாட்டின் கணினி எழுத்தறிவு விகிதம் 39.0% ஆகவும், டிஜிட்டல் எழுத்தறிவு விகிதம் 63.5% ஆகவும் உள்ளது என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கூடுதலாக, 20.2% குடும்பங்கள் டெஸ்க்டாப் அல்லது லேப்டாப் கம்ப்யூட்டரை வைத்திருக்கின்றன, நகர்ப்புறத் துறையானது கணினி மற்றும் டிஜிட்டல் திறன் இரண்டிலும் அதிக கல்வியறிவை வெளிப்படுத்துகிறது.

தொடர்ச்சி P2

# சுய தொழிலாளர்கள் ஊடக தேயிலை விற்க இணக்கம்



■ ஆ.ரமேஸ்

மலையக பிரதேசங்களில் பிரதான வீதியோரங்களில் சுய தொழிலில் ஈட்டுப்பட்டு வரும் சிறு வியாபாரிகள் ஊடாக தேயிலை தூள் வியாபாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு உடன்பாடு திட்டமொன்றை உருவாக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைத்தீவு நாடுகளுக்கான ஐக்கிய அமெரிக்கா சர்வதேச அபிவிருத்தியின் தூதரக பணிப்பாளர் கெப்ரியல் கிராவுக்கும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்விணக்கம் எட்டப்பட்டது.

தொடர்ச்சி P2



## பதவிக்காலம், ஆயுட்காலத்தை

# நீடிக்க ஆராய்வு

குறித்த காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவிக்காலம் மற்றும் பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடிக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் மாத்திரம் ஜனாதிபதி பதவி காலத்தை நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் சட்டமா அதிபரின் கருத்து கோர அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது 19ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறிலிருந்து ஐந்து வருடங்களாக சர்வஜன வாக்கெடுப்பு அல்லது மக்கள் அங்கீகாரம் இன்றி குறைக்கப்பட்டது.

அதன்படி, ஆறு ஆண்டுகளுக்கு மேல் பதவிக் காலத்தை நீட்டிக்க பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், ஆனால், தற்போதுள்ள ஐந்தாண்டுக் கால எல்லையை ஆறு ஆண்டுகளாக நீட்டிக்க பொது வாக்கெடுப்பு தேவையில்லை என்பது தொடர்பிலும் ஆராய்ந்து வருவதாக அறியமுடிகின்றது.

# விஜயதாசவுக்கு எதிரான தடையுத்தரவு நீடிப்பு



அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக நியமிப்பதையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளப்படுவதையும் தடுத்து கொழும்பு மேலதிக மாவட்ட நீதவான் சந்திம எதிரிமான்ன பிறப்பிக்கப்பட்டிருந்த தடையை நீடிக்க செவ்வாய்க்கிழமை(11) உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# வைரஸ் பரவும் அபாயம் அதிகரிப்பு

வெள்ள நீர் வடிந்து வருவதால், ஈக்களின் பெருக்கம், வயிற்றுப்போக்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக, சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் காணப்படும் சாதகமான சூழ்நிலை ஈ முட்டைகள் முதிர்ச்சியடைவதைத் துரிதப்படுத்துவதுடன், வெள்ள நீர் குறையும்போது ஈக்கள் எண்ணிக்கையில் விரைவான அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது.

புதிதாகக் குஞ்சு பொரித்த இந்த ஈக்கள், உணவு ஆதாரங்களைத் தேடி, அடிக்கடி மலம், குப்பைகள் மற்றும் அசுத்தமான பரப்புகளை நோக்கி ஈர்த்து, சுகாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்துகின்றன.” என வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





# நயினாதீவு- நாகபூசணி அம்மன் கோவிலுக்கு விஜயம்

■ நிதர்சன் வினோத்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நயினாதீவு-நாகபூசணி அம்மன் கோவிலுக்கு விஜயம் செய்து விசேட வழிபாடுகளில் செவ்வாய்க்கிழமை(11) ஈடுபட்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வடக்கில் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிகார பகிர்வு குறித்து தமிழ் – சிங்கள மக்கள்

# அறிய கூடியவாறு தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும்



■ எம்.றொசாந்த்

அதிகார பகிர்வு குறித்து தமிழ் - சிங்கள மக்கள் தெளிவாக, விபரமாக அறியக் கூடியவாறு தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதசாவிடம் கூறினோம் என பாராளுமன்றம் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# முன்னாள் எம்.பியின் கார் மின்சார தூணில் மோதி விபத்து

■ ரீ.எல்.ஜவ்பர்கான், கனகராசா சரவணன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி மின்சார தூணில் மோதிய விபத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## பெருந்தோட்ட தொழிலாளர்களின்

# 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்புக்கு பாராட்டு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறித்து அமைச்சர் மனுஷவுக்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பாராட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2




# “அனைத்துப் பிள்ளைகளும் ‘டியூஷன்’ செல்வதில்லை”

இலங்கையில் பாடசாலைகளில் கற்கும் அனைத்து பிள்ளைகளும் பிரத்தியேக வகுப்புகளுக்கு (டியூஷன்) செல்வதில்லை. எனவே, இந்த பிரத்தியேக வகுப்பு மூலம்தான் கற்பிக்க முடியும் என்ற கதையை ஏற்க முடியாது. பரீட்சைக்குத் தோற்றும் 40 இலட்சம் பிள்ளைகளில் எத்தனை பேர் பிரத்தியேக வகுப்புகளுக்குப் போயிருக்கிறார்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன வினவினார்.

கொட்டாவ வடக்கு தர்மபால கல்லூரியின் கேட்போர் கூடம் மற்றும் உள்ளக விளையாட்டு மண்டபத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (10) நடைபெற்றது.

தொடர்ச்சி P2



# “அனைவரையும் ‘அரகலய’ சிந்திக்க தூண்டியுள்ளது”

## முஷாரப் எம்.பி. தெரிவிப்பு

■ நூருல் ஹுதா உமர்

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி போன்ற நகரங்களின் மீது வீசப்பட்ட அணுகுண்டு தாக்கங்களின் பின்னர் ஜப்பான் எவ்வாறு அபிவிருத்தியில் முன்னிலைக்கு வந்ததோ இவ்வாறு இலங்கையில் ஏற்பட்ட அரகலய போராட்டத்தின் பின்னர் அமைச்சுக்களும் நிறுவனங்களும் அபிவிருத்திகள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# சுய தொழிலாளர்கள் ஊடக தேயிலை விற்க இணக்கம்

இலங்கையில் பெருந்தோட்ட சமூகம் நாட்டில் ஏனைய சமூகங்களைப் போல கல்வி, தொழில் மற்றும் பொருளாதாரம் வலுப்படுத்தல் உள்ளிட்ட நலத்திட்டங்களில் தமது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் இந்த கலந்துரையாடல் திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.

இலங்கையில் வாழ்கின்ற பெருந்தோட்டத் துறையினர் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், மலையகத்தில் பயிரிடப்பட்டுள்ள பல்வேறு வகையான தேயிலை வகைகளைப் பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.



அத்துடன், மலையக பெருந்தோட்ட சமூகத்தினர் நாட்டில் ஏனைய சமூகத்தினர் போல கல்வி, தொழில், பொருளாதாரம் உள்ளிட்ட நல மேம்பாட்டுத் திட்டங்களில் வாழ வலுப்படுத்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்திக் கலந்துரையாடப்பட்டதுடன், நாட்டின் ஏனைய சமூகங்களுடன் மலையக சமூகத்தை உள்ளடக்கி ஐக்கிய அமெரிக்கா சர்வதேச அபிவிருத்தியின் ஒத்துழைப்பை எவ்வாறு விரிவுபடுத்தலாம் என்பதிலும் கலந்துரையாடி இருவருக்கும் இடையில் உடன்பாடு ஒன்றும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அதேநேரத்தில், மலையக பெருந்தோட்ட சமூகத்தின் பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், இம்மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், ஏனைய சமூகத்திலிருந்து எமது சமூகத்தை ஓரங்கட்டப்படுவதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், சமூகத்தை மேம்படுத்துவதற்கும் அந்தப் பணியைச் செய்வதில் தான் உறுதியாக இருப்பதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது தெரிவித்துள்ளார்.

# கணினி கல்வியறிவு 39% ஆக அதிகரிப்பு

வீட்டுக் கணினி உரிமையைப் பொறுத்தவரை, நாட்டில் உள்ள 20.2% குடும்பங்களில் குறைந்தபட்சம் ஒரு கணினி கிடைக்கிறது, அதாவது ஒவ்வொரு ஐந்து குடும்பங்களிலும் ஒருவருக்கு டெஸ்க்டாப் அல்லது லேப்டாப் உள்ளது. நகர்ப்புறங்களில், இந்த சதவீதம் 34.0% ஆகவும், கிராமப்புற மற்றும் தோட்டத் துறைகளில் 18.1% ஆகவும் உள்ளது என்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# விஜயதாசவுக்கு எதிரான தடையுத்தரவு நீடிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். அதில், சரத் ஏக்கநாயக்க, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, பதில் பொதுச் செயலாளர் கீர்த்தி உடவத்த மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை அடுத்து, தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகக் கீர்த்தி உடவத்த, பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க மற்றும் தலைவர் நிமல் சிறிபாத சில்வா ஆகியோர் கட்சியின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்பதற்காக விதிக்கப்பட்ட தடையை நீடிக்குமாறு மேலதிக மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# வைரஸ் பரவும் அபாயம் அதிகரிப்பு

"ஈக்களின் எழுச்சியின் விளைவுகள் பயங்கரமானவை என்பதுடன், வயிற்றுப்போக்கு நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சலுக்கு காரணமான பாக்டீரியா மற்றும் வைரஸ்கள் உள்ளிட்ட நோய்க்கிருமிகளை ஈக்கள் காவி கொண்டு வருகின்றன" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

# அறிய கூடியவாறு தேர்தல் அறிக்கை இருக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவரும் , ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசா தமிழரசுக் கட்சியினரை , யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் உள்ள அவர்களின் அலுவலகத்தில் திங்கட்கிழமை(10) இரவு சந்தித்தார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அதிகார பகிர்வு சம்பந்தமாக எங்களுக்கு இருக்கிற ஏமாற்றங்கள், தொடர்பில் எடுத்துக் கூறினோம். நாங்கள் வேண்டாம் என கூறும் 13ஆம் திருத்தத்தைக் கூட மிக மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டுள்ளார்கள். கொடுத்ததை கூட சூழ்ச்சிகள் ஊடாக மீளப் பெற்றுக்கொள்கின்றார்கள். அதனால் இப்போது அது மிக நலிவடைந்து காணப்படுகிறது. 13ஆம் சட்ட திருத்தத்தை அமுல்படுத்துவேன் என கூறுவதில் கூட இன்றைக்கு அர்த்தம் இல்லாத நிலைமை காணப்படுகிறது என கூறினோம் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் தனது நோக்கு குறித்து கூறுகையில், கிராமங்கள் நகரங்களைக் கட்டி எழுப்பி அதனூடாக பிரதேசத்தைக் கட்டியெழுப்பி அதன் பின்னரே மாவட்டம், மாகாணம் நாடு என்பதே தன்னுடைய கோட்பாடு என்று கூறியிருந்தார்.

விசேடமாக நிதி பகிர்வு குறித்து கூறினார். அதிகார பகிர்வினை கொடுத்து விட்டு, நிதி பகிர்வை கொடுக்காவிடின் அதில் பயனில்லை என்றும் கூறினார். அதேவேளை, இனங்கள் மத்தியில் உள்ள பரஸ்பர நம்பிக்கையீனத்தை இல்லாதொழிக்க வேண்டும். அதற்கு நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும் என எம்மிடம் கூறினார் என்றார்.



தமிழ் மக்களின் அடையாளம் பேணப்பட வேண்டும். தமிழர்களின் பூர்வீகமான நிலப்பரப்பான வடக்கு, கிழக்கு தாயகம் இணைந்ததாகப் பூரண அதிகார பகிர்வு வேண்டும். அது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்.

எமது மக்கள் எதிர்பார்க்கும் அதிகார பகிர்வு பற்றிப் பேசாமல் வேறு விடயங்களைச் சொல்வது அதிகார பகிர்வு குறித்து சொல்லாது தப்பியோடுவதாக இருக்கக் கூடாது. அதிகார பகிர்வு தொடர்பில் விபரமாகத் தமிழ் சிங்கள மக்களுக்குச் சொல்ல வேண்டும் என எதிர்க்கட்சி தலைவரிடம் கூறினோம் என்றார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூறியதை வைத்துத் தான் தமிழ் மக்கள் உங்களுக்குப் பெருவாரியாக வாக்களித்தனர். என்று கூறி, நீங்கள், கொடுக்கும் வாக்குறுதியை முழு நாட்டிற்கும் சொல்ல வேண்டும். அதனை வைத்துத் தான் நாம் தீர்மானிப்போம், என எதிர்க்கட்சி தலைவரிடம் கூறினோம்.

தேர்தலில் தமக்கு ஆதரவு தாருங்கள் என வெளிப்படையாகக் கேட்கவில்லை. ஆதரவினை பெறும் நோக்குடனான சந்திப்பாகவே இது அமைந்தது எனவும் மேலும் தெரிவித்தார்.

# முன்னாள் எம்.பியின் கார் மின்சார தூணில் மோதி விபத்து

இந்த சம்பவம் இ செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை 2.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் எம்.பி உள்ளிட்ட 3 பேர், பொத்துவில் அறுகம்பையில் இருந்து வவுனியா நோக்கி வாகனத்தில் பயணித்துள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாளங்குடா பகுதியில் வாகனம் வீதியை விட்டு விலகி மின்சார தூணில் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவித்த காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# "அனைவரையும் 'அரகலய' சிந்திக்க தூண்டியுள்ளது"

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையில் மூன்று மாடிக்கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக ஆரம்பக்கட்டமாக இரண்டு மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்து குறித்த கட்டிட வேலைகளை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம், திங்கட்கிழமை (10) நடைபெற்றது. அதில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவிட்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்,

தான் பதவியேற்ற காலத்தில் கொரோனா என்றும் பொருளாதார நெருக்கடி என்றும் பல்வேறு தடைகள் வந்து அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்த முடியாது போனதாகவும் தற்போது அவ்வாறான நிலை மாறி அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவைகளை முன்னெடுக்க முடியுமானவரை முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

# 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்புக்கு பாராட்டு




சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொண்டுள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கில்பர்ட் எப்.ஹூங்போவுடன் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தும் நடவடிக்கையின் போது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமூக அபிவிருத்திக் கொள்கையைப் பின்பற்றியமைக்காக அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பாராட்டினார்.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டின் போது அமைச்சருக்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.

தொழிலாளர் சந்தை தரநிலைகள் மற்றும் தொழில் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான தற்போதைய திட்டங்கள் மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பான உண்மைகளை அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு C188 மீன்பிடி மாநாட்டை அங்கீகரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்த அமைச்சர், அது விரைவில் அங்கீகரிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தொழில் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் தொடர்பான மாநாடு (C155), வீட்டுப் பணியாளர்கள் மாநாடு (C189), மற்றும் பணியிட வன்முறை மற்றும் துன்புறுத்தல் (C190) ஆகியவற்றை அங்கீகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் அமைச்சர் விளக்கினார்.

தொழில் இழைப்பு ஏற்பட்டால் சலுகைகள், மகப்பேறு பலன்கள் மற்றும் பணியிட விபத்துகளுக்கான காப்பீடு போன்றவற்றை உள்ளடக்கி ஆரம்பிக்கப்படவுள்ள சமூக பாதுகாப்பு அமைப்பு பற்றி அமைச்சர் விளக்கினார், மேலும் சமூகப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்த சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் உதவுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

தேசிய தொழிலாளர் சந்தை தகவல் முறைமை மற்றும் தொழிலாளர் சந்தையின் மீட்பு மற்றும் உத்திகளைக் கண்காணித்துச் செயல்படுத்துவதற்கு அமைச்சுக்களுக்கு இடையேயான உயர்மட்ட குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பணியிடத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பது, பாலின சமத்துவம்,பாரபட்சமான நடைமுறைகளை இல்லாதொழிப்பதன் மூலம் இலங்கையில் பெண்களுக்கு நல்ல வேலை நிலைமைகள் எப்போதும் உறுதிப்படுத்தப்படும் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொழிலாளர் சந்தையை இலக்காகக் கொண்ட திட்டத்திற்குச் சர்வதேச தொழிலாளர் அமைப்பு முழு ஆதரவை வழங்கும் என்று பணிப்பாளர் நாயகம் கில்பர்ட் எஃப். ஹூங்போ உறுதியளித்தார்.

# "அனைத்துப் பிள்ளைகளும் 'டியூஷன்' செல்வதில்லை"

அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்...

நாம் ஒரு சவாலான எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறோம். அதுதான் பிள்ளைகள் எதிர்கொள்ளும் எதிர்காலம். பிள்ளைகள் அந்த எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் வகையில் பாடசாலையில் நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் கற்கும் சூழலை உருவாக்க வேண்டும். அந்த நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் பிள்ளைகள் மேலும் வளர்கிறார்கள்.

அபிவிருத்தி அடைந்துவரும் இன்றைய உலகில் எமது நாடும் முன்னேற்றமடைய வேண்டும்.



முன்னேற்றத்திற்கு முகங்கொடுக்கும் தலைமுறையை உருவாக்க வேண்டும். அந்த தலைமுறையை வெற்றிபெறும் தலைமுறையாக மாற்றுவதற்காகத் தான் இந்த பாடசாலைகள் ஒவ்வொன்றாகக் கட்டியெழுப்பப்படுகின்றன என்றார்.

பாடசாலை வாழ்க்கையில் புதிய விடயங்களை உருவாக்கி புதிய தலைமுறையை உருவாக்க வேண்டும் என்ற ஆசையில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். பாடசாலை வாழ்க்கையின் பின்னர் நாடு முழுவதிலும் உள்ள ஏனைய சகல சிறார்களுக்கும் மேலதிக புதிய தொழில்நுட்ப அறிவை வழங்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். பாடசாலையை விட்டு வெளியேறும் ஒவ்வொரு பிள்ளைக்கும் அந்த எதிர்கால நம்பிக்கையை வழங்குவதற்காக, அரசாங்கம் ஏற்பாடுகள் மற்றும் கொள்கை நிறுவனங்களை உருவாக்கியுள்ளது என்றார்.



## டெலிபோனுடன் 30 மொட்டுக்கள் இணைந்தன

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர். இந்நிகழ்வு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றுள்ளது .

டெலிபோனை சின்னமாகக் கொண்ட, ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டு சுமார் 30 பேர் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி இணை தொகுதி அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் விடுத்த அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்திற்குரிய மொட்டுக் கட்சியின் 30 அங்கத்தவர்களே இணைந்து கொண்டனர்.

## நெல்லிக்குளம் மலை

# உடைப்புக்கு கடும் எதிர்ப்பு

அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கிழக்கு, சேனையூர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நெல்லிக்குளம் மலைத் தொடரின் பாறைகளை உடைப்பதற்கு அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

பாறை உடைப்பு இயந்திரத்துடன் வந்தவர்கள், சனிக்கிழமை (08) உடைப்பு வேலைகளை ஆரம்பிக்க முயன்ற போது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததனால் உடைப்பு வேலைகள் நிறுத்தப்பட்டன.

ஆனால், செவ்வாய்க்கிழமை (11) காலை 9.45 மணிக்கு மீண்டும் மலை உடைப்பு வேலைகளை ஆரம்பித்த போது, மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பாறை உடைப்பு இயந்திரம் வேலைகளை ஆரம்பித்த போது அப்பகுதிக்கு மக்கள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று எதிர்ப்பை வெளியீட்டு தடுத்து நிறுத்தியுள்ளனர்.



திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசியல் வாதிகள் இவ்விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மலையில் இந்து வழிபாட்டு அடையாளங்களும் கானப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 38ஆவது ஆண்டு நினைவு தினம்



மண்டைதீவு கடலில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் யாழில் திங்கட்கிழமை (10) அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவுதின அஞ்சலி நிகழ்வானது யாழ்ப்பாணம்-குருநகர் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் உறவினர்கள், கிறிஸ்தவ மத குருமார்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு கொல்லப்பட்ட மீனவர்களுக்காக வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் அவர்களுக்கு அஞ்சலியும் செலுத்தினர்.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி குருநகர், இறங்குதுறையில் இருந்து கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் 31 பேரும் மண்டைதீவு கடலில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.













## வாகன விபத்தில் 10 பேர் காயம்



கௌசல்யா, செ.தி.பெருமாள்

ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியின் தியகல பகுதியில், வேன் ஒன்றுடன் தனியார் பேருந்தொன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் செவ்வாய்க்கிழமை (11) காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது .

விபத்தில், வேனில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் கினிகத்தேன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பேருந்தில் பயணித்த 8 பேர் காயமடைந்துள்ளதாகவும் கினிகத்தேன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் இருந்து ஹட்டனை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும், ஹட்டனில் இருந்து கண்டியை நோக்கிப் பயணித்த வேனுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது எனத் தெரிவித்த கினிகத்தேன பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திராபுர மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இந்திராபுரம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியின் குறுக்கே அமைந்துள்ள புகையிரத பாதையில் பாதுகாப்பான கடவையில்லாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

பாதுகாப்பு கடவை நீண்ட நாட்களாக இல்லாமல் இந்திராபுர மக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.தற்பொழுது போடப்பட்டிருக்கும் தற்காலிக பாதையானது கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் போடப்பட்டுள்ளது எனவும் குறித்த தற்காலிக பாதை 2012 ல் இருந்து தற்காலிக பாதையாக இருந்து வருகிறது.

இருப்பினும் இதுவரையில் நிரந்தர பாதுகாப்பான பாதை தமக்கு அமைத்துத் தரவில்லை எனவும் குறித்த விடயம் தொடர்பாகப் பல இடங்களில் தெரிவித்திருந்தோம் ஆனாலும் இதுவரையில் எந்தவொரு முடிவுகளும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் அதே நேரத்தில் குறித்த பாதை மிகவும் சீரழிந்த நிலையில் உள்ளதாகவும் பாடசாலை மாணவர்கள் உட்பட கிராம மக்கள் பெரும் ஆபத்தான நிலையில் கடந்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கான பாடசாலைக்கு குறித்த புகையிரத கடவையைக் கடந்தே செல்ல வேண்டும் எனவும் 50ற்கும் மேற்பட்ட மாணவர்கள் தினமும் பாடசாலை சென்று வரும் வரையில் பெற்றோர்கள் அச்சநிலையலேயே



தவித்து வருவதாகவும் 2016இல் 2019 வரையில் சுமார் 200ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் வசித்து வருவதாகவும் தொழில் நிமித்தம் மற்றும் அன்றாட தேவைகளுக்காகத் தினம் 1,000ற்கும் மேற்பட்டவர்கள் குறித்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையைக் கடந்து செல்ல வேண்டியுள்ளதாகவும் இதே புகையிரத கடவையில் கடந்த சில வருடங்களுக்கு முன் 16 மாடுகள் புகையிரதத்துடன் மோதுண்டு பலியான சம்பவங்களும் உண்டு.

எனவே, பல தரப்புக்கள் அரசியல் பிரமுகர்களுக்கும் குறித்த விடயம் தொடர்பில் கூறப்பட்டும் இதுவரையில் தீர்வுகள் எதுவும் எட்டப்படாத நிலையில், குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## விஷேட சந்திப்பு...



எம்.யூ.எம்.சனூண்

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கும் வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமதுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று ஆளுநர் மாளிகையில் திங்கட்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் புத்தளம் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், புத்தளம் மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

## யாழில் கொல்களம் முற்றுகை

பு. கஜிந்தன்

யாழ். பருத்தித்துறை - துன்னாலைப் பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த சட்டவிரோத கொல்களத்தை முற்றுகையிட்ட சாவகச்சேரிப் பொலிஸார் இறைச்சியாக்கப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளைச் செவ்வாய்க்கிழமை (11) காலை மீட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீண்ட தேடுதலுக்கு மத்தியில் பொலிஸார் மேற்படி சட்டவிரோத கொல்களத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது சாவகச்சேரி- மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஒரு மாட்டினை பொலிஸார் மீட்டதுடன்- ஏனைய இரண்டு மாடுகள் அடையாளம்



காணப்படாத நிலையில், சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, மட்டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஏனைய மாடுகள் இறைச்சியாக்கப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சுற்றிவளைப்பின் போது மாடுகளைக் கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றுடன் பிரதான சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 11 பாடசாலைகள் மூடப்படும்

பொசன் பண்டிகையை முன்னிட்டு, 11 பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அனுராதபுரம், மிஹிந்தலை மற்றும் தந்திரிமலை ஆகிய பகுதிகளில் உள்ள பதினொரு பாடசாலைகள் மூடப்படும் என வடமத்திய மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

'பொசன் வாரம்' ஜூன் 18ஆம் திகதி ஆரம்பித்து ஜூன் 20ஆம் திகதி நிறைவடையும் .

அதன்படி, அனுராதபுரம் மத்திய கல்லூரி, ஸ்வர்ணபாலி பாலிகா மகா வித்தியாலயம், வலிசிங்க ஹரிச்சந்திர மகா வித்தியாலயம், நிவட்டகச்சேதிய மகா பிரிவேனா, ஸாஹிரா தேசிய பாடசாலை, விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம், தேவானம்பியதிஸ்ஸபுர அல் அஸ்ஹர் வித்தியாலயம், மஹாபோதி மகா வித்தியாலயம், மிஹிந்தலை மஹா வித்தியாலயம், மிஹிந்தலை கம்மலக்ஞானம வித்தியாலயம், மிஹிந்தலை வித்தியாலயம், வித்தியாலயம் ஆகிய மூடப்படும்.

பொசன் வாரத்தில் கடமையாற்றும் பொலிஸாருக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக பாடசாலைகள் மூடப்படும்.

அநுராதபுரம் தேசிய பொசன்



விழா குழு, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திலின ஹேவாபத்திரன மற்றும் வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் கோரிக்கைக்கு அமைய பாடசாலைகள் மூடப்படவுள்ளன.

# தேர்தலுக்கான தொனிப்பொருளாக 1,700 ரூபாய் மாறிவிடக்கூடாது

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான சம்பளமாக 1,700 ரூபாய் கிடைக்குமா? கிடைக்காதா? எனும் சந்தேகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், பல பெருந்தோட்ட நிர்வாகங்கள், இம்மாதச் சம்பளத்துடன் 700 ரூபாவை சேர்த்துக் கொடுத்துள்ளன. இன்னும் சில தோட்ட நிர்வாகங்கள், தங்களுக்கு சுற்றறிக்கை கிடைக்கவில்லை என்றும் கிடைக்கும் பட்சத்தில் நிலுவைத் தொகையுடன் சேர்த்து சம்பளம் தயாரிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்தல், குதிரைக் கொம்பாகவே இருந்துவந்தது. எனினும், அரசாங்கம் தலையிட்டு சம்பள நிர்ணய சபையுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை, கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் தொழிற்சங்கங்களின் அயராத முயற்சி, பேரம் பேசுதல் ஆகியவற்றின் வெற்றியாகவே நாளொன்றுக்கான 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்பைப் பார்க்க முடியும்.

சம்பள அதிகரிப்புக்குப் பின்னர் வேலைநாட்களை நிர்வாகம் குறைத்துவிட்டால், ஏற்கெனவே வாங்கிய சம்பளத்தின் அளவே கிடைக்கும். இது தொழிலாளர்களுக்கு பெரும் நட்டமாகவே இருக்கும். எனினும், தோட்டங்களில் நிரந்தரமாக தொழில் புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, குறைவாக இருப்பதால், அதிகரித்த சம்பளத்தை வழங்குவதன் ஊடாக நிர்வாகத்துக்கு கையை கடிக்காது. ஏனெனில், பெரும்பாலான தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வேலைச் செய்பவர்களாகவே இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மலையக பிரதேசங்களில் பிரதான வீதியோரங்களில் சுயதொழிலில் ஈடுபட்டு வரும் சிறு வியாபாரிகள் ஊடாக தேயிலை தூள் வியாபாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இலங்கை மற்றும் மாலைத்தீவு நாடுகளுக்கான ஐக்கிய அமெரிக்கா சர்வதேச அபிவிருத்தியின் தூதரக பணிப்பாளர் கெப்ரியல் கிராவுக்கும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்விவகாரம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேயிலை தொழில்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சம் நிலவுகின்ற நிலையில், இவ்வாறான தூரநோக்கு சிந்தனைகள் பெருந்தோட்டங்களுக்கு அவசியமாகும். மலையகத்திலிருந்து கல்விகற்று வெளியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. இதனால், தேயிலைத்தொழில்துறை சார்ந்து இருப்போரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

அதுமட்டுமன்றி, தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமைக்கு, வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கில்பர்ட் எப்.ஹூங்போ பாராட்டியுள்ளார். தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையை பாராட்ட வேண்டும். எனினும், அதனையொரு ஆயுதமாக வருங்கால தேர்தலில் பயன்படுத்தவிடக்கூடாது.

பொருளாதார நெருக்கடிக்கு ஏற்ற வகையில் சம்பளத்தை அதிகரிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். அதனை பெற்றுக் கொடுக்கவேண்டியது தொழிற்சங்கங்களின் உரிமையாகும் என்பதுடன் அதிகரித்த சம்பளத்தைக்கொண்டு முன்னேற்ற வழிசமைப்பது தொழிலாளர்களின் கைகளிலேயே உள்ளது என்பதை வலியுறுத்துகின்றோம்.



தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாக சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும். தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் எவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# இந்தியாவிடம் எதனையும் புதிதாக எதிர்ப்பார்க்க முடியாது



**எம்.எஸ்.எம். ஐயூப்**

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கட்சியான பாரதிய ஜனதா கட்சியும் அதன் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் 2019 லோக்சபா (பொதுத்) தேர்தலில் பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் இம்முறைத் குறைந்த ஆசனங்களையே பெற்றுள்ளன.

எனினும், அவரும் அவரது கட்சியும் அவரது கூட்டணியும் ஆட்சி அதிகாரத்தை இழக்கவில்லை. அவரும் அவரது கூட்டணியும் மூன்றாவது முறையாக இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளனர்.

ஆட்சி அதிகாரத்தைப் பொறுத்தவரைத் தேவையான அளவில் ஆசனங்களை வென்றுவிட்டால் ஆசனங்கள் குறைந்ததா? இல்லையா? என்பது முக்கியமல்ல. இனி உலகில் மிகப் பெரும் சனத்தொகையைக் (143 கோடிமக்களைக்) கொண்ட நாட்டை மேலும் ஐந்தாண்டுகளுக்கு ஆளப் போவது நரேந்திர மோடியும் அவரது கட்சியும் தான்.

கடந்த முறை பாரதிய ஜனதா கட்சி பெற்ற 303 ஆசனங்களுடன் அதன் தலைமையிலான ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி 353 ஆசனங்களைப் பெற்றன. ஆனால், இம்முறை அக்கட்சிபெற்ற 240 ஆசனங்களுடன் அதன் தலைமையிலான கூட்டணி 293 ஆசனங்களையே பெற்றுள்ளன. அது அந்த கட்சிக்கும் அக் கூட்டணிக்கும் ஏற்பட்ட பாரிய சரிவாகும்

அதேவேளை, ராகுல் காந்தியின் இந்தியத் தேசிய காங்கிரஸ் கடந்த முறை பெற்ற 52 ஆசனங்களுடன் அதன் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி 91 ஆசனங்களை வென்றது. இம்முறை காங்கிரஸ் பெற்ற 99 ஆசனங்களுடன் அதன் தலைமையிலான 'இந்தியா கூட்டணி" 232 ஆசனங்களையும் வென்றுள்ளது. இது பாரிய முன்னேற்றமாகும். (இம்முறை அவரது கூட்டணியின் பெயர் மாறியுள்ளது) ஆயினும் ஆட்சி அதிகாரத்தைப் பொறுத்தவரை அந்த முன்னேற்றத்தால் பயன் இல்லை.

ஜூன் மாதம் 4ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்தியத் தேர்தல் முடிவுகளில் மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால் கடந்த முறை போல் பாரதிய ஜனதாக் கட்சி தனித்து நாட்டை ஆளும் சக்தியைப் பெறாமையேயாகும். தனித்து ஆட்சி புரிவதற்கு ஒரு கட்சி 543 தொகுதிகளைக் கொண்ட லோக்சபாவில் (இந்திய பாராளுமன்றத்தில்) 272 ஆசனங்களைப் பெறவேண்டும். ஆனால், பா.ஜ.க. தனித்து 240 ஆசனங்களை மட்டுமே வென்றுள்ளது. அதாவது மோடி இனி தமது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள தமது கூட்டணியின் சக கட்சிகளின் உதவியை நாடவேண்டும். இது மோடியின் ஆட்சியின் நிலைத்தன்மைக்கு மட்டுமன்றி, இந்திய அரசாங்கத்தின் நிலைத்தன்மைக்கும் அச்சுறுத்தலாகும். அதாவது தற்போதைய பாராளுமன்ற ஆசன பகிர்வின் காரணமாக அரசியல் நெருக்கடிகள் தோன்றலாம். மோடியின் அரசாங்கம் மட்டுமன்றி, அடுத்த தேர்தல் வரை அதனையடுத்து வரும் அரசாங்கங்களும் கவிழலாம். அதனால் சிலவேளை 1989 முதல் 1998 வரையிலான 9 ஆண்டுகளில் வி.பி.சிங், சந்திரசேகர், நரசிம்மராவ், அடல் பிஹாரிவாஜ்பாயி, தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், வாஜ்பாய் (மீண்டும்) என ஏழு பிரதமர்களிடம் ஆட்சி மாறியது போல் அரசாங்கங்கள் தொடர்ந்து சரிந்து செல்லலாம். அது போன்றதொரு நிலைமை உருவாகாமல் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள மோடி தமது கூட்டணியின் ஏனைய கட்சிகளின் பல்வேறு கோரிக்கைகளுக்கு இடமளிக்க நேரிடலாம்.

இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்குக் காரணம் மோடி அல்ல, அது முன்னாள் காங்கிரஸ் பிரதமர்களான நரசிம்மராவ் மற்றும் மன்மோகன் சிங் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட தாராள பொருளாதார கொள்கையின் விளைவாகும். மோடி செய்தது அதனை முன்னெடுத்துச் சென்றமையேயாகும்.

இது கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை பொருளாதாரத்தை அழித்துவிட்டு அப்பொருளாதாரத்தை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றதன் பின்னர் ரணில் விக்ரமசிங்க, நாணய நிதியத்தின் அவ்வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று நாட்டின் உடனடிப் பிரச்சினைகளைத் தற்காலிகமாகத் தீர்த்துவிட்டு நான் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்து விட்டேன் என்று காலை முதல் மாலை வரை சொல்லித் திரிவதற்குச் சமமாகும்.

இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்தாலும் அதன் பயன் அடிமட்ட சமூகங்களைச் சென்றடையவில்லை. மோடியின் தொகுதியான வாரணாசியிலும் வீடற்றோர் வீதியில் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். அத்தோடு நண்பர்களின் முதலாளித்துவம் (Crony Capitalism) என்றே அவ்வளர்ச்சி அழைக்கப்படுகிறது. அதனால் ஊழல் கொடிகட்டிப் பறக்கிறது.

இரண்டு முதலமைச்சர்களைச் சிறையில் அடைத்தே மோடி தேர்தலை நடத்தினார். வருவாய்த் துறையினர் எதிர்க் கட்சியினரைப் பின்தொடர்ந்தனர். அத்தோடு, அளவுக்கு அதிகமாக சமயம் அரசியலாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. படித்தவர்கள் மத்தியில் இவற்றுக்கு எதிரான கருத்துக்கள் பரவியுள்ளன. மோடியின் கூட்டணியின் பின்னடைவுக்கு அவையே காரணம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

"கச்சத்தீவை மீட்டெடுப்பேன்" என்று தமிழ் நாட்டை வென்றெடுக்க மோடி போட்ட கணக்கு பிழைத்து விட்டது. அம்மாநிலத்தில் ஒரு ஆசனத்தையேனும் அவரால் வென்றெடுக்கமுடியவில்லை. இந்த நிலையில், இலங்கை இந்திய உறவில் முன்னேற்றம் ஏற்படுமா அல்லது பின்னடைவு ஏற்படுமா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

ஆட்சி மாற்றங்கள் மற்றும் தமிழ் நாட்டின் பலம் ஆகியவற்றை பார்கிலும் உலகச் சூழலில் இந்தியாவுக்கு எந்தளவுக்கு இலங்கை வேண்டும் என்பதிலேயே இலங்கை இந்திய உறவு தங்கியுள்ளது. அதாவது தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்தியா இலங்கை விடயத்தில் எந்த ஆயுதத்தைப் பாவிக்கப் போகிறது என்பதிலேயே இந்த உறவு தீர்மானிக்கப்படுகிறது.

1991ற்கு முன்னர் இந்தியா அமெரிக்காவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் எதிரான சோவியத் குழுமத்தின் ஆதரவு நாடாகவே இருந்தது. இந்தியாவுக்கு இரு மருங்கிலும் இருக்கும் பாகிஸ்தானும் வங்காளதேசமும் அமெரிக்கச் சார்பு நாடுகளாக இருந்தன. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையும் சோவியத் ஆதரவு நாடாகியது. எனினும் 1977இல் அமெரிக்க ஆதரவாளரான ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன பதவிக்கு வந்தார். அமெரிக்க அடிவருடியான இஸ்ரேலுடனும் அவர் இராஜதந்திர உறவை ஆரம்பித்தார். இது இந்தியாவைச் சீண்டும் செயலாகியது. ஏனெனில், அதனால் இந்தியா மூன்று அமெரிக்கச் சார்பு நாடுகளால் சூழப்படும் நிலை உருவாகியது. எனவே, இந்தியா இலங்கையை தண்டிக்க காரணம் தேடிக்கொண்டு இருந்தது. இந்தநிலையில் தான் இலங்கையில் தமிழர்களின் ஆயுதக் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. 1983இல் தமிழர்களுக்கு எதிரான பாரிய இனவாத தாக்குதல்கள் வெடிக்கவே ஆயிரக் கணக்கில் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்தியாவுக்கு பிடி கிடைத்தது. அது இந்த அகதிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றும் அதற்காக இலங்கையில் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றும் வற்புறுத்தியது. அத்தோடு, இனப்பிரச்சினையை உக்கிரமடையச் செய்வதற்காகத் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதமும் ஆயுதப் பயிற்சியும் பணமும் வழங்கியது. இறுதியில் இந்தியா ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கத்தை அச்சுறுத்தி 1987இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அதன் மூலமாக மாகாண சபை முறையையும் இலங்கை அரசாங்கத்தின் மீது திணித்தது. புலிகளை அடக்குவதற்காக தமது படைகளையும் இலங்கைக்கு அனுப்பியது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அரச படைகள் தாக்குதல்களின்போது, தமிழ் நாட்டில் பதற்றநிலை ஏற்பட்டது. எனவே, இந்திய அரசாங்கம் அவ்வப்போது இலங்கை மீது நெருக்குதலைக் கொடுத்தது.

2008இல் புலிகள் கிழக்கு மாகாணத்தை முழுமையாகவும் வடமாகாணத்தில் பெரும் பகுதியையும் இழந்து பெருமளவில் சாதாரண மக்கள் கொல்லப்பட்டுவந்தனர். அப்போது போரொன்றின் போது சாதாரண மக்கள் உயிரிழப்பது சகஜம் என ஜெயலலிதா கூறியிருந்தார். அதேகால கட்டத்தில் நீண்ட காலமாகவே தாம் புலிகள் மீதான நம்பிக்கையை இழந்துள்ளதாகக் கருணாநிதியும் கூறினார். இவ்வாறே இந்தியா இலங்கை விடயத்தில் போர்க் காலத்தில் நடந்துகொண்டது.

1991இல் சோவியத் ஒன்றியம் சிதறிவிட்டது. இந்திய சோவியத் உறவும் மாறிவிட்டது. அதேயாண்டு இந்தியா உள்நாட்டுப் பொருளாதார காரணங்களுக்காகத் தாராள பொருளாதார முறையைத் தழுவியது. அதன் காரணமாக இந்தியாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையிலான உறவு வளரலாயிற்று. இந்து சமுத்திர வலையத்தில் இந்தியா மீதான மேற்குலக பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் வெகுவாக குறைந்தன. இந்தியா இலங்கையில் தமது பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்க ஆரம்பித்தது. இனப் பிரச்சினை இந்திய முன்னுரிமை பட்டியலில் மிகக் கீழ் இடமொன்றுக்குத் தள்ளப்பட்டது. அதைத்தான் 2017இல் இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த எஸ்.ஜெய்சங்கர் 1987ற்கு பின்னர் எத்தனையோ விடயங்கள் மாறிவிட்டன என்றும் புதிய நிலைமையில் சந்தர்ப்பங்களைக் கைப்பற்றிக்கொள்ள முயல வேண்டும் என்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிமசந்திரன் மூலமாகத் தமிழ் மக்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

எனவே, இந்திய அரசியல் மாற்றங்களால் இலங்கை மீதான இந்தியாவின் அக்கறையில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

## கடிதங்கள்

### பேருந்து சேவையை நடத்துங்கள்

கிளிநொச்சி-முழங்காவில் பிரதேசத்தில் புதிய வழித் தடத்தில் பேருந்து சேவைகள் நடத்தப்பட வேண்டும் என பல கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முழங்காவில் உப நகரத்தில் இருந்து இரணைமாதா நகர், நாச்சிக்குடா, செபஸ்ரியார்புரம், கரடிக்குன்று, ஜேம்ஸ்புரம், நாச்சிக்குடா சந்தி வரையான ஆகிய வழித் தடத்திலேயே புதிய பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டும் என மேற்படி கிராமங்களின் மக்கள் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

முழங்காவில் பேருந்து நிலையத்தில் நீண்ட நேரம் தரித்து நிற்கும் பேருந்துகள் குறுகிய பேருந்து சேவையாக நடாத்துவதன் மூலம் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 1,000 வரையான குடும்பங்கள் பெரும் பயனடைவார்கள்.

முழங்காவில் மகா வித்தியாலயம், இரணைதீவு பாடசாலை, நாச்சிக்குடா பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்கள் இலகுவாக வந்து செல்ல முடியும். இதனை விட முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர்கள் இலகுவாக வர முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-35 சாலை வழியாக முழங்காவில் மன்னார் வரை பேருந்து சேவைகள் நடைபெறுகின்றன. இதேபோன்று கிளிநொச்சி நகரத்தில் இருந்து அக்கராயன் வன்னேரிக்குளம் வழியாக முழங்காவில் வரை பேருந்து சேவைகள் நடைபெறுகின்ற போதிலும் மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களுக்கு பேருந்து சேவைகள் இடம்பெறாமை பெரும் பாதிப்புகளை உருவாக்கியுள்ளது. 2009 ஆம் ஆண்டின் முன்னர் மேற்படி கிராமங்களுக்கான பேருந்து சேவைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

– நடராசா கிருஸ்ணகுமார்

Smart Phone கைக்குள்

# இன்றைய மாணவ சமூகம்



தேவலிங்கம் நிலக்ஷனா

4ஆம் வருட கல்வியியல் சிறப்பு கற்கை,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
இலங்கை.

அன்று மனிதன், மனிதனோடு தொடர்பினை மேற்கொள்ளவும் மனித தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்ய மனிதனால் மனித கைக்குள் அடங்கும் வகையில் உருவாக்கப்பட்டவையே கையடக்க தொலைபேசிகள் ஆகும். ஆனால், இவை இன்று அபரிவிதமான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக திறன் பேசிகள் (Smart Phone) என்ற பெயரோடு இன்றைய சமூகத்தை அதன் கைக்குள் அடக்கி வைத்துள்ளன.

"கூவும் செல்போனின் நச்சரிப்பை அனைத்து கொஞ்சம் சில்வண்டின் உச்சரிப்பைக் கேட்போம்" என பல வருடங்களுக்கு முன்னர் வெளியான சிவாஜி படப்பாடலில் அழகாக வரிகள் அமைத்திருக்கிறார் நா.முத்துக்குமார். முன்னைய சமூகத்தினர் ஏனையவருடன் பேசுவதற்காக மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்தினர். ஆனால், இன்று குழந்தைக்குச் சோறூட்டுவது முதல் பணத்தை வங்கியில் வைப்பு செய்வது வரை அனைத்தையும் செய்து விடுகின்றன இந்த திறன் பேசிகள்.

இலங்கையில் பொதுவாக கோவிட்-19 பரவலைத் தொடர்ந்தே இணையவழி கற்கை ஆரம்பமானது. இதனை அடிப்படையாக வைத்து அனைத்து மாணவர்கள் மத்தியிலும் திறன்பேசிகளின் பாவனை புழக்கமுறைத் தொடங்கி விட்டன. ஆனால், இணையவழி கற்கை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும் திறன்பேசிகளின் பாவனையைக் குறைத்துக் கொள்ள முடியவில்லை என்றே கூற முடியும்.

2011ஆம் ஆண்டில் உலக சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின்படி 5 பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துகின்றார்கள். நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும். ஆனால், இன்றைய சமூகத்தினர் 5 மணித்தியாலங்களுக்கு மேல் பயன்படுத்துகின்றார்கள் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன. சீனாவில் குழந்தைகள் நாளொன்றுக்கு 60 நிமிடங்கள் மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும் என 2021இல் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், நம் நாட்டில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை நம்மில் எத்தனையோ பேர் இருபத்து நான்கு மணித்தியாலங்களும் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றோம்.

இலங்கையில் 2024ஆம் ஆண்டு ஆய்வு முடிவில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60% சதவீதம் பேர் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்மாகாணத்தில் உள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்திய குழுவொன்று ஆய்வொன்றை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திர ஸ்ரீ கூறியுள்ளார். இதில் பல சிறுவர்கள் இரவில் தூக்கமின்றி கவலையுடன் இருப்பதாகவும், இவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளைச் சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆய்வில் வெளிவந்துள்ளது. மேலும் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ள சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களது உடல் சரியாகச் செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடுவதாகவும் அதனைப் பெற்றோர்களால் கட்டுப்படுத்த முடியாத உள்ளதாகவும் ஆய்வு முடிவு கூறுகின்றது. அவசியமாக இருந்தால் மட்டும் பிள்ளைகளுக்கு ஒரு மணித்தியாலத்துக்குக் குறைந்த அளவு கையடக்க தொலைபேசிகளை வழங்கும் படி வைத்திய குழு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

திறன்பேசிகளால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை. ஆனால், "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது போல இன்று அளவுக்கு மீறி திறன்பேசிகள் எனும் போதையில் அடிமையாகி விட்டார்கள். இன்றைய சமூகத்தினருக்கு உணவின்றியும் ஒரு நாள் இருந்து விடலாம் இன்டர்நெட் கார்ட் (Internet Card) இல்லாமல் வாழ முடியாதுள்ளது.

தேவையற்ற செயலிகளின் பதிவிறக்கம், காணொளிகள் பதிவிறக்கம், இணையவழி விளையாட்டுக்கள், போதைப் பொருள் பாவனை, தகாத உறவுகள், மன அழுத்தங்கள், உடல் நோய்கள் இதனால் குடும்பங்களுக்கிடையே முரண்பாடுகள், சமூக சீரழிவுகள் என பல்வேறு சவால்களை ஏற்படுத்தி விடுகின்றன இந்த திறன் பேசிகள். எவ்வளவுதான் பத்திரிக்கைகள், ஊடகங்களினூடாக கைபேசியின் பாவனையைக் குறையுங்கள் என பற்பல செய்திகள் பரப்பப்பட்டாலும் அவை இன்று அதிகரித்துக் கொண்டு செல்கின்ற வண்ணமே உள்ளன.

நமது முன்னைய தலைமுறையினர் நடக்க, பேச, பழக, சமைக்க, வாழ என பல்வேறு விடயங்களை சமூகத்திடமிருந்து கற்றுக்கொண்டார்கள். ஆனால், நம் தலைமுறையினர் இவை அனைத்தையும் திறன்பேசிகளிடமிருந்து கற்றுக் கொள்வதுடன் அவர்களுக்கும் சமூகத்திற்கும் தேவையற்ற விடயங்களையும் கற்றுக் கொண்டு சமூகத்திலிருந்து தனிமையாகி விடுகின்றார்கள். எந்தளவிற்கு நாம் கைபேசிகளுடன் நேரத்தைச் செலவிடுகின்றோமோ? அந்தளவுக்கு நாம் குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் பிரிந்து செல்கின்றோம்.

சூழலோடும் சமூகத்தோடும் ஒன்றித்து வாழ்ந்தால் தான் சூழலிலிருந்து வரும் தாக்கங்களை எதிர்கொள்ளக் கூடியவனாக மனிதன் மாற முடியும். அன்று "பெற்றோர்கள் வெளியில் செல்ல வேண்டாம் என பிள்ளைகளிடம் கூறிய காலம் மாறி இன்று வெளியில் சென்று விளையாடு என கூறுமளவுக்கு இன்றைய சமூகத்தினர் திறன்பேசிகளுடன் ஒன்றித்து வாழ்கின்றார்கள் என்றே கூற வேண்டும். மனிதன் மனிதனோடு எங்கிருந்தாலும் தொடர்பினை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட இந்த கைபேசிகள் மனித முகங்களைப் பார்த்துப் பேச முடியாத அளவிற்கு மாற்றி விட்டன.

எது எவ்வாறாக இருந்தாலும் "கத்திக் கொண்டு கனியையும் நறுக்கலாம், பிறர் உயிரையும் பறிக்கலாம்" என்பதுபோல எந்த ஒரு விடயமாக இருந்தாலும் நன்மையும் காணப்படும் அதேபோல, தீமைகளும் காணப்படும். அதுபோலவே திறன்பேசிகளை நம் திறன்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்துவோமாக இருந்தால் நாமும் சமூகத்தைச் சீர்படுத்திச் சிறந்த பிரஜையாகப் பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ முடியும்.



சிறுவர் தொழிலாளர்

# எதிர்ப்பு தினம்



ஒவ்வொரு சிறுவர் தொழிலாளி உருவாகும் போதும் நாட்டின் சாதனையாளர் ஒருவர் இழக்கப்படுகின்றார். நாட்டின் எதிர்காலம் இருண்ட நிலைக்குத் தள்ளப்படுகின்றது. புத்தகப்பையை சுமக்க வேண்டிய வயதில் குடும்ப வறுமை காரணமாக சிறுவர் தொழிலாளியாக மாறும் சிறுவர்களின் வாழ்வு சுருண்டு போகின்றது குப்பைப் பையில். இதனைத் தடுக்கவே ILO (International Labor Organization) எனப்படும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினத்தை ஆண்டுதோறும் ஜூன் 12 அன்று கொண்டாட வலியுறுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்ட இந்த நாள் உலகெங்கிலும் உள்ள சிறுவர் தொழிலாளர்களின் அவலநிலையை முடிவிற்குக் கொண்டு வரவும், அனைத்து வகையான சிறுவர் தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் முயற்சி செய்கின்றது. 2002 முதல், ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் முறையை ஒழிப்பதற்கும், தடை செய்வதற்கும் உடனடி மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க உலக சமூகத்தை வலியுறுத்தியது. 2025ற்குள் சிறுவர் தொழிலாளர்கள் இல்லாத உலகை உருவாக்கும் இலக்கை அடைய, அதிகமான செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றது.

1919இல் கொண்டு வரப்பட்ட 'வெர்சாய்ஸ்' உடன்படிக்கை முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த உடன்படிக்கை சமூக நீதியின் வழியாக மட்டுமே நிலையான அமைதியை அடைய முடியும் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தது. இதன் விளைவாக, 2002ஆம் ஆண்டில், சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான உலக நாள் அரசு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தனி நபர்களுக்குக் சிறுவர் தொழிலாளர் பிரச்சினையை வலியுறுத்தியுள்ளது. இப்பிரச்சினையை ஒரு விரிவான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் தீர்க்கவும், சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிந்து மதிப்பீடு செய்யவும் ஒரு தளத்தை வழங்குவதற்காக நிறுவப்பட்டது இந்நாள். பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு "சிறுவர் பருவம், திறன், மாண்பு, உடல் மற்றும் மன வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் வேலை" என்று சிறுவர் தொழிலாளர்களின் வேலையை வரையறுக்கிறது. இந்த வரையறையானது, ஒரு சிறுவர் ஆரோக்கியமான நபராக வளர உதவும் செயல்பாடுகளைப் புறநிலையாக அடையாளம் கண்டுபிடிப்பதற்கு ஒரு வழியாக உள்ளது.

சிறுவர்களை அடிமைப்படுத்தி, அவர்களது குடும்பங்களிலிருந்து அவர்களைப் பிரிப்பது, கடுமையான ஆபத்துகள் மற்றும் நோய்கள் ஏற்படுத்துகின்றது.

ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு 1999இல் சிறுவர் தொழிலாளர் மற்றும் மனித வர்த்தகத்தை அகற்றுவதற்கான அதன் முயற்சிகளை விரைவுபடுத்தக் சிறுவர்களை பணியமர்த்தும் போது, அவர்களது வயது கட்டாய பாடசாலை கல்வி வயதை விடக் குறைவாக இருக்கக்கூடாது என்று வரையறுத்தது. அதன்பின் 2015இல் ILO ஆல் நிறுவப்பட்ட உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குகள் அதன் பணிக்கு கூடுதல் வேகத்தை அளித்தன.

2025ஆம் ஆண்டிற்குள் அனைத்து வகையான சிறுவர் தொழிலாளர்களையும் ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.



> **"சிறுவர் தொழிலாளர் விதிமுறைகள் என பொதுவாக அறியப்படும் நியாயமான தொழிலாளர் தரநிலைச் சட்ட விதிகள் 1938ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சிறுவர் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் முயற்சிகள், அவசர தேவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சிறுவர் தொழிலாளர்களின் ஆபத்துகளைப் பற்றி அறியாத பெரியவர்களுக்குக் கல்வி அளிப்பதையும் முன்னெடுத்து வருகின்றது**

ஆபிரிக்காவில் 7 கோடியே 21 இலட்சம் ஆபிரிக்க சிறுவர்கள் சிறுவர் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர், அவர்களில் 3 கோடியே 15 இலட்சம் பேர் மிகவும் மோசமான சூழ்நிலையில் வேலை செய்கிறார்கள்.

19ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி முழுவதும், அமெரிக்காவில் விவசாயம் மற்றும் கைவினைத் தொழில்களில் பல சிறுவர் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்பட்டனர். 10 முதல் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பண்ணைத் தொழிலாளர்களாகவும், ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும் பணியமர்த்தப்பட்டனர். இந்த சூழலைத் தவிர்க்கவே சிறுவர் தொழிலாளர் எதிர்ப்பு நாள் கொண்டு வரப்பட்டது. சிறுவர் தொழிலாளர் விதிமுறைகள் என பொதுவாக அறியப்படும் நியாயமான தொழிலாளர் தரநிலைச் சட்ட விதிகள் 1938ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சிறுவர் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் முயற்சிகள், அவசர தேவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சிறுவர் தொழிலாளர்களின் ஆபத்துகளைப் பற்றி அறியாத பெரியவர்களுக்குக் கல்வி அளிப்பதையும் முன்னெடுத்து வருகின்றது.

ILO எனப்படும் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பில் 187 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. வளரும் நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களிடையே அமைதி மற்றும் நேர்மையை உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்காக 1969ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசினை இவ்வமைப்பு பெற்றது.

சிறுவர் தொழிலாளர்களின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, உலகம் முழுவதும் உள்ள பல சிறுவர்களின் வாழ்க்கையை இவ்வமைப்பு மேம்படுத்தியுள்ளது. உலகெங்கிலும் தேவைப்படும் சிறுவர்களுக்கு உதவுவதற்காக, உதவித்தொகை, சிறுவர் பராமரிப்பு திட்டங்கள் போன்ற பல முயற்சிகள் இவ்வமைப்பால் நிறுவப்பட்டுள்ளன இதனால் அதிகமான சிறுவர்ளுக்கு ஒளிமயமான எதிர்காலம் உருவாகியுள்ளது.

சிறுவர்கள் உலகின் எதிர்கால சந்ததியினர். அவர்களுக்குக் கல்வி அளிக்காமல் பணிபுரியச் செய்வது மிகப்பெரிய கொடுமையாகும். எனவே, அத்தகைய துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் இந்த உலக சிறுவர் தொழிலாளர்கள் தின கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. அதே போன்று இந்த ஆண்டு "அனைவருக்கும் சமூக நீதி சிறுவர் தொழிலாளர் முறையை முடிவிற்குக் கொண்டு வருதல்" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உலகம் முழுவதும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகின் ஏழ்மையான நாடுகளில், ஐந்தில் ஒரு சிறுவர் தொழிலாளியாக உள்ளது. வளர்ச்சியடைந்த மற்றும் வளர்ச்சி குறைந்த நாடுகளில், நான்கில் ஒரு சிறுவர் (வயது 5 முதல் 17 வரை) அவர்களின் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் கேடு விளைவிப்பதாகக் கருதப்படும் உழைப்பில் ஈடுபடுகின்றது. ஆபிரிக்காவில் சிறுவர் தொழிலாளர்கள் அதிக அளவில் உள்ளனர் (5 முதல் 17 வயது வரையிலான சிறுவர்களில் 26 விகிதம்).

இது இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடன் ஒப்பிடும் போது, 7 விகிதம் சிறுவர்கள் தீங்கு விளைவிக்கும் வேலையைச் செய்கின்றனர். உலகின் எல்லாப் பகுதிகளிலும் பாலின வேறுபாடு இன்றி 5 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர் சிறுவர் தொழிலாளர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

அத்துடன், நகரங்களில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் வேலைகளுக்குக் சிறுவர்கள் தள்ளப்படும் சூழலும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்நிலை மாற வேண்டுமென்றால் சிறுவர் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, சட்டத்தைப் புறக்கணிக்கும் முதலாளிகள் மீது அந்தந்த நாடுகளின் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதே நேரத்தில், இந்த வறுமையை ஒழிக்க, நாட்டில் கல்வியை மேம்படுத்த வேண்டும்.





விமான விபத்தில் மலாவி

# துணை ஜனாதிபதி பலி

மலாவியின் துணை ஜனாதிபதி சவுலோஸ் கிளாஸ் சிலிமா (Saulos Klaus Chilima) பயணித்த இராணுவ விமானம் விபத்துக்கு உள்ளானதில், அவர் பலியாகியுள்ளார்.

அவருடைய பயணித்த அவருடைய மனைவி மற்றும் எண்மரும் பலியாகியுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்கிழக்கு ஆப்பிரிக்க நாடான மலாவியின் தலைநகர் லிலாங்வேயில் இருந்து துணை ஜனாதிபதி சவுலோஸ் கிளாஸ் சிலிமா (51) மற்றும் 9 பேருடன் திங்கட்கிழமை (10) காலை புறப்பட்ட மலாவி பாதுகாப்பு படை விமானம், ரேடாரில் இருந்து காணாமல் போனது.

“ரேடாரில் இருந்து விலகியதில் இருந்து விமானத்துடன் தொடர்பு கொள்ள விமான அதிகாரிகளின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன”

விமான நிபுணர்களால் விமானத்தை கண்டுபிடிக்க முடியாமல் போனதை அடுத்து தேடுதல் மற்றும் மீட்பு பணி தொடங்கப்பட்டது. அந்நாட்டு நேரப்படி காலை 9:17 மணியளவில் விமானம் புறப்பட்டு, காலை 10.02 மணிக்கு Mzuzu சர்வதேச விமான நிலையத்தில் திட்டமிடப்பட்டப்படி தரையிறங்க வேண்டும்.

ஆனால் விமானம் அப்படி இல்லாமல், ரேடாரில் இருந்து விலகியது. இந்நிலையிலேயே அந்த விமானம் விபத்துக்கு உள்ளானது என்றும் அதில் பயணித்த அனைவரும் பலியாகியுள்ளனர் என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஒட்டாவா

கனடாவில்

## இந்திய இளைஞர் சுட்டுக்கொலை



கனடாவில் இந்திய இளைஞனை மர்ம நபர்கள் சுட்டுக்கொன்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் சர்ரே பகுதியில் உள்ள கார் நிறுவனத்தில் யுவராஜ் கோயல் என்ற 28 வயதான இந்திய இளைஞர் பணியாற்றி வந்தார். இவர், இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

கடந்த 7ஆம் திகதி இந்தியாவில் வசிக்கும் தன் தாயிடம் தொலைபேசியில் பேசிகொண்டிருந்த யுவராஜ் கோயலை மர்ம நபர்கள், மீது துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடினர். தகவலறிந்த பொலிஸார், யுவராஜ் கோயலின் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பினர்.

இது தொடர்பாக அதே பகுதியைச் சேர்ந்த 23, 20, 23, 20, ஆகிய வயதுடைய நான்கு பேரை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

வொஷிங்டன்

அப்பிள் மொபைல் போன்களுக்கு

## தடை விதித்த எலான் மஸ்க்

தனது நிறுவனங்களில் ‘ஆப்பிள்’ மொபைல் போன்களுக்கு தடை விதிக்கப் போவதாக டெஸ்லா, எக்ஸ் சமூக வலைத்தள நிறுவனங்களின் உரிமையாளர் எலான் மஸ்க் கூறியுள்ளார்.

ஆப்பிள் நிறுவனம் மற்றும் செயற்கை நுண்ணறிவு நிறுவனமான ஓபன் ஏஐ நிறுவனம் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு உள்ளது. இதன்படி, ஆப்பிள் நிறுவனத்தின் மொபைல் போன்கள் மற்றும் செயலிகளில் சாட்ஜிபிடி தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

இந்நிலையில், உலக செல்வந்தர்களில் ஒருவரும் டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய நிறுவனங்களின் தலைமை செயல் நிர்வாக அதிகாரியும், எக்ஸ் சமூக வலைத்தளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க் இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது “ஓபன் ஏஐ -ன் தொழில்நுட்பத்தை ஆப்பிள், தனது சாதனங்களில் இணைத்தால், எனது நிறுவனங்களில் ஆப்பிள் சாதனங்களுக்குத் தடை விதிக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ள முடியாத பாதுகாப்பு விதிமீறல்.

நிறுவனங்களுக்கு வருபவர்கள், தங்களது ஆப்பிள் சாதனங்களை வாசலில் இருக்கும் கூண்டில் வைத்து விட்டு வர வேண்டி இருக்கும்” இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



திருநெல்வேலி

தமிழக சட்டசபை

## ஜூன் 20இல் கூடுகிறது



தமிழகத்தின் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் அறிவிப்பு காரணமாக, ஜூன் 24ஆம் திகதிக்கு பதில் முன்னதாக ஜூன் 20இல் தமிழக சட்டசபை துவங்கும் என சபாநாயகர் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை வரும் 24ஆம் திததி கூட உள்ளதாக அறிவித்து இருந்தது. இச்சூழ்நிலையில், விக்கிரவாண்டியில் ஜூலை 10ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கும் என தேர்தல் கடந்த திங்கட்கிழமை அறிவித்தது. இதனால், தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

இந்நிலையில், திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் செய்தியாளர்களை சந்தித்த சபாநாயகர் அப்பாவு கூறியதாவது, “விக்கிரவாண்டி இடைத்தேர்தல் அறிவிப்பு காரணமாக 24ஆம் திகதி துவங்கவிருந்த சட்டசபை கூட்டத்தொடர் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு துவங்கும்.

மேலும், விளவங்கோடு இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற தாரகை, இன்று காலை 11 மணிக்கு பதவியேற்கிறார்.

12 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூடி எத்தனை நாட்கள் கூட்டம் நடத்துவது, எந்தெந்த திகதிகளில் கூட்டம் மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்யப்படும்” என்று அவர் தெரிவித்தார்.

பூந்தமல்லி

திடீரென தீப்பிடித்து எரிந்த காரிலிருந்து

## குழந்தையுடன் தப்பிய தம்பதி

ஸ்ரீபெரும்புதூர் அடுத்த காட்டரம் பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் புஷ்பராஜ் (26). இவரது மனைவி ஜெயா (21). இத்தம்பதிக்கு ஒரு குழந்தை உள்ள நிலையில், புஷ்பராஜ், தனது மனைவி ஜெயா மற்றும் குழந்தையை அழைத்துக் கொண்டு காட்டரம்பாக்கம் நோக்கி காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்ட சாலை நசரத்பேட்டை அருகே சென்ற போது, காரின் முன் பகுதியிலிருந்து புகை வந்துள்ளது.



இதையடுத்து, காரை வீதியின் ஓரமாக நிறுத்திவிட்டு மூன்று பேரும் காரில் இருந்து இறங்கிய சிறிது நேரத்தில் கார் திடீரென கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. இது குறித்து பூந்தமல்லி தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் காரில் கொழுந்து விட்டு எரிந்த தீயை தண்ணீர் ஊற்றி அணைத்துள்ளனர்.

இந்த விபத்தில் கார் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளது. கார் தீப்பிடித்து எரிந்ததையடுத்து அந்த வழியாக எந்த வாகனங்களும் செல்ல அனுமதிக்கப்படாததால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

பின்னர் கிரேன் உதவியுடன் தீயில் எரிந்த காரை பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

இந்த சம்பவம் குறித்து நசரத்பேட்டை பொலிஸார் விசாரணை நடத்தி வரும் நிலையில், இது அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

# பங்களாதேஷை வென்ற தென்னாபிரிக்கா



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நடைபெற்ற பங்களாதேஷ் உடனான குழு டி போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 113/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 46 (44), டேவிட் மில்லர் 29 (38), குயின்டன் டி கொக் 18 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: தன்ஸிம் ஹஸன் சகிப் 3/18 [4], தஸ்கின் அஹ்மட் 2/19 [4], ரிஷாட் ஹொஸைன் 1/32 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 0/18 [4], மகமதுல்லா 0/17 [3], ஷகிப் அல் ஹஸன் 0/6 [1])

பங்களாதேஷ்: 109/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: தௌஹிட் ஹிரிடோய் 37 (34), மகமதுல்லா 20 (27), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 14 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 3/27 [4], அன்றிச் நொர்கியா 2/17 [4], ககிஸோ றபாடா 2/19 [4], மார்கோ ஜன்சன் 0/17 [4], ஒட்னெய்ல் பார்ட்மன் 0/27 [4])

போட்டியின் நாயகன்: ஹென்றிச் கிளாசென்

இந்நிலையில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை இந்தியா எதிர்கொள்ளவுள்ளதுடன், ட்ரினிடாட்டில் வியாழக்கிழமை(13) காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் மேற்கிந்தியத் தீவுகளை நியூசிலாந்து எதிர்கொள்ளவுள்ளது.



மலிங்கவின் பேஸ்புக்கில் பிரபலமான

## பைனாசின் இல்லத்துக்குச் சென்ற ரிஷாட்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் லசித் மலிங்கவின் பேஸ்புக் மூலம், நாடு முழுவதும் அறியப்பட்ட அநுராதபுரம், ஹொரவபொத்தானை, பத்தாவ பிரதேசத்தின் இளம் கிரிக்கெட் வீரர் பைனாஸின் இல்லத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் சனிக்கிழமை (09) விஜயம் மேற்கொண்டதுடன், பைனாஸின் திறமையை பாராட்டி, வாழ்த்தி, ஒரு தொகை பணத்தையும் வழங்கிவைத்தார்.

அத்துடன், பைனாசின் எதிர்கால கல்விச் செயற்பாடுகள் மற்றும் கிரிக்கெட்டில் அவருக்குள்ள ஈடுபாடு, அதீத திறமை குறித்து கேட்டறிந்துகொண்ட பதியுதீன், அவரின் எதிர்கால முன்னேற்றத்துக்கு தன்னால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

இதன்போது பைனாசின் பெற்றோர், உறவினர், சக விளையாட்டு வீரர் மற்றும் ஊர்மக்கள் என அனைவரும் அங்கு ஒன்றுகூடியிருந்ததுடன், பதியுதீனுக்கு தங்களது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

## காயத்தால் யூரோவைத் தவறவிடும் டி ஜொங்

யூரோ கால்பந்தாட்டத் தொடரிலிருந்து நெதர்லாந்தின் மத்தியகளவீரர் பிரெங்கி டி ஜொங் திங்கட்கிழமை (10) விலகியுள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவுக்காக விளையாடும்போது இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி வலது கணுக்காலில் காயமடைந்த பின்னர் 27 வயதான டி ஜொங் விளையாடியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், யூரோவுக்கான குழாமில் குணமடைவாரென்ற எதிர்பார்ப்பில் டி ஜொங் பெயரிடப்பட்டிருந்தார்.



## துருக்கியை வென்ற போலந்து

போலந்தில் செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்ற அவ்வணியுடனான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் துருக்கி தோற்றது.

போலந்து சார்பாக கரோல் ஸ்விடெர்ஸ்கி, நிகொலா ஸலெவ்ஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, துருக்கி சார்பாகப் பெறப்பட்ட கோலை பரிஸ் அல்பர் யில்மாஸ் பெற்றிருந்தார்.



களுதாவளை கூடைப்பந்தாட்டத் தொடர்:

# KBC சம்பியன்





வி.ரி.சகாதேவராஜா

களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் நடாத்திய கிழக்கு மாகாண கூடைப்பந்தாட்டத் தொடரில் காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகம் (KBC) சம்பியனானது.

ஆறு கழகங்கள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியானது களுதாவளை மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றபோது சிவானந்தா கூடைப்பந்தாட்டக் கழகத்தை 81-69 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றே காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகம் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 12 ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.